கலியுகத்து [illegible] [illegible]

பக்திரசக் கீர்த்தனைகள்

Q23:417
N23
175435

014

உ

சிவகிருபை

திருநெல்லை நகர்

14 AUG 1923

# சிவானந்தசுவாமிகளால்

இயற்றப்பட்ட

# கலியுக "சன்மார்க்க" சங்கீத பக்திரசக் கீர்த்தனைகள்

பிரஸில், பதிப்பிக்கப்பெற்றது

1923

[அணா 2

O28:417
N23
125435

௳

# முகவுரை

ஐயன்மீர்,

கடல் சூழ்ந்த இப்பரந்த பூவுலகில் மானிடர் தத்தம் நெறிகளினின்றும் விலகி, உலகபந்தங்கட்குட்பட்டு, சீரழிவதைக் கண்ணுற்ற நாம், இக்கலியுகக் கொடுமைகளினின்றும் சிற்சில நீதிசங்கீதங்களை இயற்றியுள்ளோம். பாகதியைவிரும்புபவர் இப்பக்தி ரஸக்கீர்த்தனைகளைப் பாடிப் பயன்பெறுவர். அறம்பொருளின்ப மூன்றையும் விரும்புபவர்கள் மாயவலையைத் தள்ளி இப்பக்தி ரஸக்கீர்த்தனைகளைப் பாடி, சித்தித்த யாவற்றையும் பெற்று இறுதியில் முததியடைவாராக இக்கீர்த்தனைகளிற் காணுங் குற்றங்களைப் பொறுத்து, குணங்களைக்கைக்கொண்டு என்னையும் ஆதரிக்கவேண்டுகின்றேன்.

சுவாமி, சிவானந்தா

1 4 AUG

175435
சென்னை-600 ...

உ

சிவகிருபை.

விநாயகர் துதி

அத்திமுகத்தோனே, சத்தியவள்பெறு முத்தாரமார்பா
இத்தரையைச் சிகியிலேறியின்புடன் பவனிவந்த
உத்தமனே நெல்லைவாழ் முத்தமிழ்சிவானந்தம்
பத்திரஸக் கீர்த்தனையைக் கீர்த்தனையைக் கண்பார்,
[பாரபுகழ்சிவன் மைந்தா

## பழனியாண்டவர் மீது பாடியது

இ-ம்-இந்துஸ்தானி தோடி தா-ம் ஆதி

பல்லவி

பாலாபிஷேகன் தேவா சிவன் மைந்தனே
பாலன் ஆறுமுகனே

அநுபல்லவி

பார்வதி புதல்வா பாரில் முதல்வா
பாதந்தேடினேன் நீ வா பக்ஷமுடன் காவா

(தொகையறு)

பராபரனே துன்பம் நீக்கி யாள்வாய் குமரனே
பக்தி சிவானந்தத்திக்கருள் புரிவோனே
பழனியாண்டையா பாவந்தீரையா
பன்னிரு கண்ணையா பதமலர் தாருமையா

(பாலாபிஷேகன்)

(ஈசனைத் தியானித்தல்)

இ-ம் காப்பி தா-ம் ஏகம்

(கலிமேலா என்ற மெட்டு)

பல்லவி

நினையாய் வரந்தருமவன் பதமலர்
நெடுவினை செய்யும் மனமே அநுதினமே

அநுபல்லவி

மனைமாதரை நினைந்திடில் பயனென்ன
மடமைசேர் நெஞ்சகமே அநுதினமே நினை
அய்யோ மரண தருண மணுகினால்
அருள்புரிவர் எவரோ
மெய்யான் சிவானந்தன் சொல்தனை
மேல்நோக்கிடத் தவரோ
செய்யாதீர் நரகிடும் பவவினை
சேவடி போற்றிட நலமே—(அநு) நினை

(சரீரத்தை வெறுத்தல்)

இ-ம் தேசிக தோடி தா-ம் ஆதி

(கத்தனை ஞானக்கொழுகுமலை என்ற மெட்டு)

பல்லவி

இன்பமோ என்றும் இழிவுதரும் உடலைக்கருதில் உமக்கதி [இ]

அநுபல்லவி

துன்பக்கிருமிக்கிது வீடு

தோலினாற் கட்டிய மண்ணேணை
தோசிகள் விரும்புங்கூடு
தொந்தரை, தங்கிய. சஞ்சலக், கட்டையால் (இன்)

சரணம்

மண்ணுக்கிரையாம் இக்கட்டை
மாய்ந்திடில் வெட்டியதோர் மட்டை
மண்டலத்தோர்க்கிப்பாட்டை
மகிழ்வுடன் ஆனந்தமோதினேன் கேட்பீர் (இன்)

## (உத்தியோகத்தினாலேற்படும் துன்பம்)

இ-ப் கமாஸ் தாளம் ஆதி.

(சுஜனா ஜீவனா என்ற மெட்டு)

பல்லவி

இதென்ன வேலையா பாரில்
இதென்ன தொல்லையா தேவா (இதென்ன)

அநுபல்லவி

இரவு நேரமும் எந்தன் இடுக்கண் பாராயோ
ஏழையென்மனம்வேலைமிஞ்சிடப் பாழடைந்ததுவேதேவா இ

சரணம்

இச்செகமீதில் உத்தியோகத்தால்
என்றும் கஷ்டமே
இகபரமளிக்கும் தெய்வமே

இனி தீர் நஷ்டமே
பட்சமோடு வா பாலன்
பக்கமே தேவா
பந்தந்தீர் சிவானந்தம்
பாடலைப்பண்பொடு கண்பாராய் தேவா
(இதென்ன)

## (உலகவாழ்வை வெறுத்தல்)

இ-ம் கல்யாணி தா-ம் ரூபகம்
(நம்பினேனுனையே என்ற மெட்டு)

பல்லவி

வாழ்வை நம்பாதே மாய
வாழ்வை நம்பாதே மனமே (வாழ்வை)

அநுபல்லவி

தாழ்விலாத யீசன் பாதம்
தாங்கினின்றாலதுவே போதும்
தமிழ் சிவா னந்த மோதும்
தாய மான நீதி வேதம் (வாழ்வை)
பெண்டுபிள்ளைக்கென்ன வாட்டம்
பிடுங்கித் தின்பதிலே நாட்டம்
கொண்ட சொத்தினால் கொண்டாட்டம்
குறைந்துபோனால் எல்லாம் ஓட்டம் (வாழ்வை)

இன்றைக்கிருக்கும் செல்வம் போகும்
ஏழைச்செல்வ மதிகமாகும்
இறுதிநாளில் வருமே சாவும்
ஏகநாதன் பாதந் தாவும் (வாழ்வை)

(விவாகத்தாலேற்படும் துன்பம்)

இ-ம் பார்வி நாட்டை தா-ம் ஆதி

(கல்யாணஞ்செய்துவையுமே என்ற மெட்டு)

பல்லவி

கல்யாணஞ் செய்தல் துன்பமே நம்
கனபெருமையைப் போக்கும் (கல்)

சரணம்

கொண்டமனைவி மக்களுக்கென்ன விசாரம்
கொடுப்பவனிருந்தால் தின்பதே சாரம்
பெண்டுடன் வாழ்வதும் பெரிய பூபாரம்
பெருந்துயரிடுவதும் அவ ரூபகாரம்
(கல்யாணஞ்)

சரணம்

அநுதினம் சுகத்தை நாடி நாம் செல்வோம்
அவர்களுடன் சேர்ந்து பலத்தையும் விடுவோம்
அல்லிலும் பகலிலும் வீணாகக் கழிப்போம்
அவன் பதமலர் ஒருக்காலுமே சேரோம்

சரணம்

திரவிய முழுவதும் அவராலே யழியும்
த்ரேக பலமெல்லாம் நம்மைவிட்டுக் கழியும்
தினமிதைப் படித்தினியாவது தெளியும்
திருநெல்லை சிவா னந்தம் நூற் பயனறியும்

(கல்யாணஞ்)

## (அன்னியமாதரை விலக்கல்)

இ-ம் தேசிகதோடி தா-ம் ஆதி

(வனஜாட்சி என்ற மெட்டு)

பல்லவி

நினையாதே மயல்தரு மாதரை (நினை)

அனுபல்லவி

நெறியிலாது மயலே யோது
மங்கை சூதுயென்றுந் தீது (நினை)

சரணம்

இடையினிலணுவது இமிடேஷன் சேலே
இருகாதில் ஜொலிப்பது வைரத்தின் வேலே
நடையினில் நின்று மயக்குவாள் மாலே
நளினமாது நகைப்புஞ் சூது
நம்பில் தீது
நமக்காகா து (நினை)

சரணம்.

மறுமையில்பெருந்துயரளித்டுமோகம்
மாதரைநம்பினலில்லை விவேகம்
மனத்தைக்கெடுத்துக் கொடுப்பரேசோகம்
மதியைப்போக்கும் விதியைத்தூக்கும்
நிதியைநீக்கும் சதிக்குள்ளாக்கும் (நினை

சரணம்.

தெருவினில்தியங்கிநாம் விழித்திடவிடுவார்
திரவியமனைத்தையும் பறிக்கவேதொடுவார்
திருநெல்லை ஆனந்தஞ்சொல் கேட்டிடுவார்.
திசைகளெங்கும் இசைகள்பாடும்
தில்லைநாதன் பதமேசேர்வர் [நினை

(துறவறம்)

இராகம் செஞ்சுருட்டி.
தாளம் ஆதி.
சுருளிமலை என்றமெட்டு.

பத்தி தருமெய்யாந் துறவறமே பூண்டால்
கத்தனுஞ் செய்குவான் நல்வரமே
பரகதியை நாடயதி உத்தம மார்க்கமிது
தானே சுகந்தானே (பத்தி)
உலகபந்தமத்தனையும் நீக்கும் சித்த

யோகிகளின் மாதவத்திலாக்கும் மற்றும்,
ஓசைதரும் ஈசன்பாதம் கண்டுதரிசித்திடவே
ஆக்கும் வினைபோகரும்
காமவலைநீக்கியருள் செய்யும் ஈசன்
கருணையெனுமாமழைமிகப் பெய்யும் பொல்லாக்
களவு கொலை சூதும்மற்றுதீதானயாவற்றையும்
தீர்க்கும் புண்யம்சேர்க்கும்
திருநெல்லைசிவா னந்தஞ்சொல்லை (க்கேட்டால்
தினையளவும் அனுகாது தொல்லை
தீர்க்கமுடன் நோக்குபவர் பாக்கியமுற்றின்பங்கொள்வார்.
நானே மொழிந்தேன் (பத்தி)

175435

(போலித்துறவிகளின் கபடம்)

(போலித்துறவிகளின்கபடம்
இ—ம் இந்துஸ்தானிபியாக்
தா—ம் ஆதி.
(காசுதிகண் காசுதியே என்றமெட்டு.)

(பல்லவி)
போலிச்சன்யாசமே
பூண்டாலதிமோசமே (போலி)

அனுபல்வி.
கோலக்கத்திபிடுக்கி
அலைக்கற்றவர்போல்திரியும் (போலி)

சரணம்.

தாலியொன்றும் வேண்டாமென்று தாசிகளைக்கைப்பிடித்து
சாமியென்றுகண்டவர்துத்திடவே நடித்து
காலியான தலத்தில்வந்த கன்னியரைக்கண்ணடித்து
கஞ்சாவெனும்லாகிரியாலுண்டாகும்புகைகுடித்து

கள்ளர்களைப்போல்வந்துதித்தாரே
கடவுளின்நாமத்தையே பழித்தாரே
மெள்ளவேஜனங்களைக் கெடுத்தாரே,
மேலாஞ்சிவானந்தஞ்சொல்லழித்தாரே

புத்திமானைபோலே
இத்தரையின்மேலே
எந்த்ருண்யத்தாலே
மெத்தப்பிழைப்பதாலே (போலி)

ஆவணக்காப்பக
சென்னை-600 008

(காலைத்தோத்திரம்)
(ஐயாப்பழனிமலைவேலா என்றமெட்டு)
இ—ம் சகானு தா—ம் ஆதி

(கண்ணிகள்.)

தேவாபிரவிலென்னைக் காத்தாய்—நான்
க்ஷேமமாய் எழுந்திடப் பார்த்தாய்
மூவாமைந்தனுயெனைச் சேர்த்தாய்
முழுமுதற்கடவுளே தந்தையாய் வாய்த்தாய் (தேவா)

பகலினுமென்னை ரட்சிப்பாயே நான்
படுந்துயரனைத்தையுந்தீர்ப்பாயே
இகபர மெனக்கு நீ யளிப்பாயே
இருபதமலரடி சேர்ப்பாயே (தேவா)
செல்லைசிவா னந்தங்கவி சூடி
நேயமாயருளுன தன்பு கூட்டி
தொல்லையகற்றவாவெனை நாடி
துதித்தேனே பலகவி பாடி (தேவா)

(ஈசனே துணை.)

இ—ம் தேசிகதோடி தாம் ஏகம்

(அம்பிகாவுன்மகன் என்றமெட்டு.)

தெய்வமேவுன்னிருபதம்
தேடினேன் நான் சந்ததம்
மெய்யில்லா தஜோதிர்ப்ரேகா
மேலான பரமே யோகா
பெய்யாயுன்னருளை வாகா
பேதை மீது வாது ஆகுமா (தெய்வமே)
துன்பபதை நீக்குந் தேவா
தூயனே யருள வாவா
இன்பமே சுகந்தந்து காவா
இடுக்கண்தீர்மகாறு பாவா (தெய்வமே)

1 AUG 1923

செந்தமிழ் சிவா, னந்தமே
தேடும் பரமா னந்தமே
மைந்தனுனக்கே சொந்தமே
மனத்தாற்றுதித்துப் படித்தேன் சந்தமே தெய்)

(திருச்செந்தூர் முருகன்மீது பாடியது)
இ...ம் இந்துஸ்தானி தோடி தா--ம் ஆதி
[ராஜவிசுவாசலாலா என்ற மெட்டு]

பல்லவி
தேசமயமான தேவா சிவன் பாலனே

அனுபல்லவி
பேசவுன்சிந்து பேரின்பந்தந்து
பிணிகளகற்றுவதால் மனமுவந்து [தேச]

(சரணம்)
சினமோடறக்கரினமே அறுக்கதிருவேலெடுத்தகுமரா
தினமே துதிக்கமயில்வாகனத்தைநடத்தும் அமரா
சேயனைக்காக்கத் திருவடிசேர்க்க
செப்பும்சிவானந்தத்தின் பண்பார்க்க
(தேசமயமான)

(நெல்லை நகரிலுள்ள திருவருவாமலைக் கந்தன்மீதுபாடியது)
இ—ம் சாவேரி தாம்—ம் ஆதி.
(கழுகுமாமலைமுருகா என்றமெட்டு.)

பல்லவி.

திருவுருவாமலை முருகா தேவிசாமேவரி
தினஞ்சேவித்திடும்சிங்கார

(அனுபல்லவி)

கூவியழைத்தேனுன்னை
குறைகளைத்தீர்க்கவென்று
கோபங்கொள்ளாதே எந்தன்
பாவந்தீராயா யின்று
கோறினேன் வாவா பதங்
கூறினேன் காவா நிதங்
கொஞ்சிடுங்குஞ்சரியின் மனநாதா, (திருவுருவா

(பாட்டுதொடர்.)

மாயப்பிரபஞ்சமீதில்மயங்கித்திரியுமென்னை
நேயமுடன்வந்தாள-நீவாவாவென்றுன்னை
நித்தியப்தேடி கோவில்
சுத்தினேன்பாடி உந்தன்
பக்திசிவானந்தத்தினைக்கூடி

(திருவுருவாமலைமுருகா)

விருத்தம்.

காமமே குலத்தினையும்நலத்தினையும் கெடுக்கவந்தகளங்
காமமே தரித்திரங்களனைத்தையும் பகட்டிவைக்குங்கடாரங்

காமமேபாகதிக்குசொல்லவொட்டாமல் வழியடைக்குங்
கபாடங்
காமமேயனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங்
கத்திதானே

## விருத்தம்.

மண்ணுலகத்தினில் வரம்பில்பெரும்பவத்தைப்
பெண்ணுருவமாகப்பிரமன் படைத்ததன்று
லெண்ணலஃதுணர்தியன்னவரைச் சிந்தைதனி
லெண்ணவரும் பாவமெழுமையினும் நீங்குவதோ

நிட்டையிலே இருந்துமனத்துறவடைந்தபெரியோர்கள்
[விமலன்றாளைக்
கிட்டையிலே தொடுத்துமுத்தியைப் பெறுமளவுப்பெரிய
[சுகங்கிடைக்கும்
காமவேட்டையிலே மதிமயங்கி சிறுவருக்குமணம்பேசி
[விரும்பித்தாலி
கட்டையிலேதொடுத்து நடுக்கட்டையிலேகிடத்துமட்டுங்
[கவலைதானே
ஆலகால விஷத்தையும் நம்பலாம் ஆற்றையும் பெருங்காற்
[றையும் நம்பலாம்
கோலமாமதயானையைநம்பலாம் கொல்லும்வேங்கைப்புலி
[யையும் நம்பலாம்

காலனார்விடுதூதரைநம்பலாம் கள்ளர்வேடர்மறவரை
[நம்பலாம்
சேலைகட்டியமாதரைநம்பினால் தெருவினில் நின்றுதியங்கித்
(தவிப்பரே)

தந்தை தாய்நிஜமுமல்லத் தனையருநிஜமுமல்ல
மனைமந்தருநிஜமுமல்ல மனையவநிஜமுமல்ல
இந்தமெய்நிஜமுமல்ல
இல்லறநிஜமுமல்ல
சுந்தரப்பரப்பிர்மத்தின் சொரூபத்தைத்தெரிவாய்நெஞ்சே
காண்பதுமழிந்துபோகும் காயமுமழிந்துபோகும்,
ஊண்பொருளழிந்துபோகும் உலகமுமழிந்துபோகும்
பூண்பணியீசனார்தம் பொற்பாதம்அழியாதென்று
வீண்பொழுதினைப்போக்காமல் வெளிதனிலொழியார்
[நெஞ்சே

பொருளாசை பெண்ணாசை பூவாசையென்று
மருளாசையாமாசைமாற்றித் தெருளான
வேந்தராய் வாழலாமெய்யன்பானன் நெஞ்சே
பூந்தராய்நாதரைநீபோற்று.

மனையாளுமக்களும்வாழ்வுந் தனமுந் தன்வாசல்மட்டே
இனமான சுற்றமயானமட்டே வழிக்கேது துணை
தினையாமளவெள்ளளவாகிலும் முன்புசெய்ததவம்
தனையாளுமென்றும் பரலோகஞ்சிறக்குஞ்சத்தியமே.

பிறவாதிருக்க வரம்பெறல்வேண்டும் பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டு காணிதுவெப்படியோ
அறமார்புகழ்த்தில்லை யம்பலவாணரடிக்கமலம்
மறவாதிருமனமே யதுகாணன் மருந்துனக்கே.

பெண்ணாகிவந்ததொரு மாயப்பிசாசம் பிடித்திட்டென்னை
கண்ணால்வெருட்டி முலைபான்மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங்குழியிடைத்தள்ளி யென்போதப்பொருளால்பறிக்க
வெண்ணாதுனைமறந்தேனி வாகச்சியேகம்பனே

தாயும்பகைகொண்ட பெண்டிர் பெருபகைதன்னுடைய
சேயும்பகையுறவோரும் பகையிச்செகமும்பகை
ஆயும்பொழுதில் அருஞ்செல்வநீங்கிலிங் காதலினால்
தோயுநெஞ்சே மருதீசர்பொற்பாதஞ்சுதந்திரமே.

முற்றிற்று.

17543



9A
10-26